IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No. 112/2024

dated : 10.03.2026

D.W.2

Name அழகம்மாள்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னை 11ம் பிரதிவாதி சாட்சியமளிக்க அழைத்தார். வீடு சம்பந்தமாக வழக்கு போட்டுள்ளார் என்ன வழக்கு போட்டுள்ளார் என்று தெரியாது. 11ம் பிரதிவாதி எனது உறவினர் அல்ல. வாதி பெயர் தெரியாது. 11ம் பிரதிவாதிக்கு உறவினர் ஆவார். வாதியின் தந்தை பெயர் சுப்பையா. அவருக்கு எத்தனை குழந்தைகள் என்று தெரியாது. வாதி குடும்பத்தினரை 30 ஆண்டுகளாக தெரியும். ஆனால் அவருடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது. உத்தமன் யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று தெரியாது ஆனால் அவர் தேங்காய் வியாபாரி ஆவார். எத்தனை செண்ட் கிரையம் வாங்கினார் என்றும் தெரியாது. மேற்படி தேங்காய் வியாபாரி குடும்பத்தினர் பாகம் பிரித்துக் கொண்டார்களா இல்லையா என்றும் எனக்கு தெரியாது. 11ம் பிரதிவாதியின் தாயார் பெயருக்கு அவரது தந்தை கிரையம் வாங்கினார். 11ம் பிரதிவாதியின் தாயார்தான் சொத்தை எழுதிக் கொடுத்தார். வாதியின் சகோதரர் 1ம் பிரதிவாதிதான் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும்

எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் வழக்கு பற்றிய விவரங்கள் பற்றி ஏதும் தெரியாமலேயே நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றும் எனவே எனது சாட்சியம் நிராகரிக்கதக்கது என்று சொன்னால் சரியல்ல. 10, 11 பிரதிவாதிகள் கேட்டுக் கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**14 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.10 15:51:36 +0530